ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2199/2 - 2020 ඔක්තෝබර් මස 26 වැනි සඳුදා - 2020.10.26

2199/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் திருத்தப்பட்டவாறான 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 2152/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் 2 ஆம் பந்தியின் (என்) உப பந்திக்கு உடனடுத்து பின்வரும் உப பந்தியைச் சேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன் :-

(ஓ) சுகாதார அமைச்சின் செயலாளரது பரிந்துரையின் பேரில், பொதுத் திறைசேரி செயலாளரது அங்கீகாரத்திற்கு அமைவாக, ஏதேனும் முகவர் நிறுவனம் ஒன்றினால் இறக்குமதி செய்யப்படும் அல்லது இறக்குமதி செய்து வழங்கப்படும் சுகாதார சேவைகளுக்கு விநியோகிக்கத் தேவையான சோதனைக் கருவிகள் உட்பட மருத்துவ உபகரணங்களும் கருவிகளும்.

இக்கட்டளையானது, 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி முதல் பயன்வலு உடையதாதல் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2020, ஒற்றோபர் 26.

12-29

1A-PG 5221 — 570 (2020/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*